தலைப்பு 002 – பிரதம அமைச்சர் அலுவலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தலைப்பு 002 பிரதம அமைச்சர அலுவலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடங்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் 11(1) நிதிக்கூற்றுக்கள் பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 31 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அலுவலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஜுலை 24 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

பிரதம அமைச்சர அலுவலகத்தின் 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களினால், நிதி நிலைமை, நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்பு 1 இல் குறிப்பிடப்படும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மைகள் தொடர்பில் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் பிரதம அமைச்சர அலுவலகத்தின், பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை பிரதம அமைச்சர அலுவலகத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரச நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி 06/2024 இலக்கத்திற்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அலுவலகத்தினால்வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாகும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்படடிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பிரதம அமைச்சர் அலுவலகம் 2024 ஆண்டில் ரூபா 1,185,000,000 இனை திறைசேரியிடம கட்டுநிதி கோரத் திட்டமிட்டிருந்த போதும், ரூபா 1,179,610,000 இனை கோரியிருந்தது. அதன் பிரகாரம், திட்டமிட்ட மற்றும் கோரிய கட்டுநிதி பெறுமதிக்கிடையே ரூபா 5,390,000 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	செலவு தொடர்பாக எதிர்வுகூறி,TOD/IMP 04 கொண்ட மாதாந்த கட்டுநிதி விண்ணப்பத்தை திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு அனுப்பிய போதும்,அன்றாடம் கணக்குப் பிரிவிற்கு கிடைக்கும் வவுசர்களை அந்த கணனித் தொகுதிக்கு உள்ளீடு செய்த பின்அதற்காக மாத்திரம் திறைசேரியால் முற்பணம் வழங்கல் செய்யப்படுவதாகவும் மிகவும் நடைமுறை சாத்தியமான நிதி தேவைப்பாடிற்கு மாத்திரம் நிதி வழங்கப்படுவதன் மீதுமேற்குறிப்பிட்ட நிலைமை ஏற்பட்டுள்ளது.	செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உரியவாறு எதிர்காலத்தில் கட்டுநிதியை திட்டமிட வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இரண்டு செலவு விடயங்களிற்கு வழங்கியிருந்த மதிப்பீட்டு நிதிஏற்பாட்டின் கூட்டுத் தொகை ரூபா 2,600,000 செலவிடப்படாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.	இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் உரியவாறு பயன்படுத்தப்பட்டமையால் மூலதன் தன்மையிலான திருத்தங்கள் ஏற்படாததன் மீது இந்த செலவு விடயங்களின் கீழ் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது.	தேவைக்கு இணங்க நடைமுறை சாத்தியமான மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும்.
(ஆ)	24 செலவு விடயங்களின் தேறிய நிதிஏற்பாடான ரூபா 307,117,366 இலிருந்து 20 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சளவில் செலவிடப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.	இலத்திரலியல் தகவல் தொழிநுட்ப பயன்பாடு, கட்டுநிதி கிடைக்காது வாடகை மற்றும் வீதவரி பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்யப்படாமை, நீர் மின்சார முகாமை மற்றும் மினசார கட்டணைம் குறைக்கப்பட்டமை, சுத்திகரிப்பு சேவை மற்றும் உபசரணை செலவுகள் குறைவடைந்தமை, பிரதமரின் தனிப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரயாணச் செலவு மட்டுப்படுத்தப்பட்டமை, வாகனத் தொகுதி குறைக்கப்பட்டு பராமரிப்பு செலவு குறைந்தமை, இடமாற்றத்திற்காக பதில் அலுவலர்கள் இணைக்கப்படாமை, மதிப்பீட்டின் பிரகாரம் எரிபொருள் செலவு, வெளிநாட்டு பயிற்சி செலவு ஏற்படாமை, பாதுகாப்பு வண்டிகள் சனாதிபதி அலுவலகத்திற்கு ஒப்படைக்கபட்டமை காரணமாக காப்புறுதி இடம்பெறாமை மற்றும் இன்னும் சில காரணங்களால் விடயங்களில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது.	தேவைக்கு இணங்க நடைமுறை சாத்தியமான மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும்.
(இ)	வருடாந்த நிதிஏற்பாடு ரூபா 136,000,000 ஆன 10 செலவு விடயங்களில் இருந்து நி.பி 66 மூலம் வேறு செலவு விடயங்களிற்கு நிதிஏற்பாடு மாற்றப்பட்ட பின்னரும் தேறிய நிதிஏற்பாட்டில் 18 சதவீதம் முதல் 78 சதவீதம் வரையான வீச்சளவில் மேலும் நிதிஏற்பாடு	தனிப்பட்ட பதவியணியினர் மட்டுப்படுத்தப்பட்டதால் மேலதிக நேரம், உள்நாட்டு பிரயாணம் மற்றும் பிரயாணப் படிகள் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமையும் தகவல் தொழிநுட்ப உதிரிப்பாகங்களை பயன்படுத்திமை,குண்டு துளைக்காத வண்டி சனாதிபதி அலுவலகத்திற்கு வழங்கிய காரணத்தால் காப்புறுதி செய்யப்படாமை,தொகுதி வாகனங்கள் குறைக்கப்பட்டதால் காப்புறுதி நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை கூட்டங்கள் மற்றும் விழாக்களிற்கு உபசரிப்பு செலவு	மதிப்பீட்டு நிதிஏற்பாட்டை உச்சதாக பயன்படுத்தல் மற்றும் தேவைக்கு இணங்க நடைமுறை சாத்தியமான மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும்.

	சேமிக்கப்பட்டிருந்தது.	மட்டுப்படுத்தப்பட்டதால் செலவு விடயங்களில் கீழ் ஒதுக்கிய நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது.	
(ஈ)	09 செலவு விடயங்களிற்கான வருடாந்த மதிப்பீட்டு நிதிஏற்பாடான ரூபா 234,500,000 இற்கு மேலதிகமாக நி.பி. 66 மற்றும் முறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 129,632,000 ஆன நிதிஏற்பாடு பெற்றுக் கொண்டு, 8 சதவீதம் முதல் 1,175 சதவீதம் வரையான வீச்சளவில் நிதிஏற்பாட்டை அதிகரித்துக் கொண்டிருந்தது.	இயந்திரம் மற்றும் இயந்திர உபகரண திருத்தம், வாடகை மற்றும் வீதவரி,மின் உற்பத்தி இயந்திர பராமரிப்பிற்காக நிலுவை பட்டியல்,விழா மற்றும் உபசரிப்பு செலவு,நுகர்வுப் பொருட்கள்,சிறு செலவுக் கட்டுநிதி மீள்நிரப்பல், பதவிநிலை அலுவலர்களின் எரிபொருள் படிகள்,வாகன திருத்த செலவிற்காக நிதிஏற்பாடு போதாதமை காரணமாக பொது திறைசேரியிலிருந்து மேலதிக நிதிஏற்பாடு மற்றும் நி.பி.66 மூலம் நிதிஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.	தேவைக்கு இணங்க நடைமுறை சாத்தியமான மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும்.

3.3 சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இனங்காமைகள்

சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

	சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் கொடர்ப	இணக்கமின்மை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை			
	XXIVஅத்தியாயத்தின் 3:7 பந்தி	கடன் தொகை வழங்கிய மாதத்தின் பின்னர் வரும் அடுத்த மாதத்திலிருந்து கடன் தவணை அறவிட வேண்டிய போதும், விழா முற்பணம், பதிவேட்டின் பிரகாரம் அதற்கு இணங்காத 14 சந்தர்ப்பங்ள் அவதானிக்கப்பட்டது.	இங்கு குறிப்பிடப்படும் அலுவலர்களின் 2024 ஏப்ரல் மாதம் செலுத்தப்பட்ட விழா முற்பணத்தை குறித்த அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட்டிருப்பது 2024 ஜூன் மாதத்தில் இருந்தாவதுடன் எதிர்காலத்தில் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.7 பந்தி பிரகாரம் செயற்பட குறித்துக் கொண்டேன்.	தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் கடனை மீள் அறவிட வேண்டும்.

(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
(i)	371 (2)(ஆ)மற்றும் பிரதம அமைச்சரின் செயலாளரின் உள்ளக சுற்றறிக்கை 2023/FIN/03	மீளாய்வாண்டில் 07 அலுவலர்களிற்கு 16 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த உப கட்டுநிதி பிரமாணத்தின் பிரகாரம் குறித்த பணி முடிவடைந்தவுடன் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உப கட்டுநிதி உச்ச எல்லையை மீறி ஒழுங்கான அங்கீகாரமின்றி 2024 ஜுலை 10 திகதி கெமரா களைஞர் ஒருவருக்கு ரூபா 120,000 தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.	நிமித்த உப கட்டுநிதி பெற்றுக் கொண்ட திகதியிலிருந்து 14 நாட்களினுள் குறித்த பணியை நிறைவு செய்து எஞ்சிய தொகையையுடன் முற்பணத்தை தீர்க்குமாறும் குறித்த காலத்திற்கு இணங்காத முற்பணத்தை குறித்த அலுவலரிடமிருந்து நிதிப் பிரமாணம் பிரகாரம் அறவிடுமாறு அறிவித்து பிரிவுத் தலைவர்கள் அறிவுருத்தப்பட்டுள்ளனர். முற்பணத்தை தீர்க்க முன்னர் மேலும் முற்பணம் வழங்காதிருக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	கொம்ட்ரோல ஜனராலின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 04/2018 மற்றும் 2018.12.31 திகதிய நிதியல்லா சொத்துக்களை மதிப்பீடு செய்யும் வழிகாட்டி	நிதியல்லா சொத்துக்களை ஒவ்வொரு 05 ஆண்டுகளிற்கும் ஒரு முறை மதிப்பீடு செய்ய வேண்டிய போதும், பிரதம அமைச்சர் அலுவலகத்தில் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய நிதியல்லா சொத்துக்கள் அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்ய 2025.05.02 திகதிய கடிதம் மூலம் அரச மதிப்பீட்டு திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. எனினும் 2025.05.09 திகதி அவர்களால் எமக்கு அறிவித்திருப்பது மீண்டும் (இரண்டாம் சுற்று) இற்காக நிதியல்லா சொத்துக்களை மதிப்பீடு செய்ய அறிவுரை வழங்கப்படவில்லை என்பதாகும். ஏனைய அலுவலக உபகரணங்களை மீள் மதிப்பீடு செய்ய மதிப்பீட்டு குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கிறேன்.	சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 கடமை பணிகளை மேற்கொள்ளும் முன்னேற்றம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தேசிய கூட்டுறவு முயற்சிகளுடன் தொடர்பான வரிசை நிறுவனங்களை மறுசீரமைப்பதற்காக 2023ஒக்டோபர் 23 திகதி பிரதம அமைச்சரின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவினால், எதிர்வரும் 03 ஆண்டுகளினுள் செயற்படுத்த பொருத்தமான செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரிக்க வேண்டிய போதும் 2024 திசெம்பர் 31 திகதி வரை அதனை செய்திருக்கவில்லை.	உப குழு அறிக்கை பிரதம அமைச்சர் செயலாளர் ஊடாக பிரதம அமைச்சரிற்கு சமர்ப்பித்துள்ள போதும் அது அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த காரணத்தின் மீது முன்நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அமைச்சரவை கலக்கப்பட்டதால் மீண்டும் குழு நியமிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது.	விசேட பணிகளிற்காக நியமிக்கப்படும் குழுக்களினால் எதிர்பாரக்கும் பணிகளை செய்து கொள்ள வேண்டும்.
(ஆ)	மேல்நாட்டு தமிழ் மக்களை முழுமையாக இலங்கை சமூகத்துடன் இணைத்துக் கொள்வதற்காக 2024 ஏப்ரல் 29 திகதி நடைபெற்ற கலந்துரையாடலுடன் தொடர்புடைய அமைச்சரவை உப குழு அறிக்கை, பிரதம அமைச்சின் செயலாளரிற்கு அனுப்பியுள்ள போதும் அது தொடர்பான முன்நடவடிக்கை மீளாய்வாண்டு இறுதி வரை நடைமுறைப்படுத்தியதாக தகவல் வெளிப்படுத்தப்படவில்லை.	அமைச்சரவை உப குழு அறிக்கை பிரதம அமைச்சரின் ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க பிரதம அமைச்சரின் செயலாளர் சமர்ப்பித்துள்ள போதும் அமைச்சரவை கலக்கப்படுவதன் மீது அந்தக் குழுவை மீண்டும் நிறுவி முன்நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.	- மேற்படி -

4.2 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆண்டில் வெசாக் விழாவிற்காக சீன தூதுவர் அலுவலகத்தின் ஒருங்கிணைப்புடன் ரூபா 3,282,634 பெறுமதியான திசூ கடதாசி இருப்பொன்று பிரதம அமைச்சரின் அலுவலகத்திற்கு உதவியாக வழங்கப்பட்டிருந்தது. இதற்காக வரி மற்றும் ஏனைய கட்டணமாக ரூபா 1,505,171 அதாவது பிரதான பெறுமதியின் 46 சதவீதம் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் செலவிட்டிருந்த போதும் 2025 மே 23 திகதி வரை அவற்றில் ஒரு பகுதி குறித்த பணிக்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	சீன வியாபார நிறுவனமொன்றினால் பிரதம அமைச்சரின் அலுவலகத்திற்கு அன்பளிப்பு செய்திருந்த திசூ கடதாசி இருப்பை 2025 ஆண்டில் அரச வெசாக் விழா நடைபெறும் நுவரெலிய மாவட்டத்தில் வெசாக் விழாவிற்கு பாவிப்பதற்காக நுவரெலிய மாவட்ட செயலகத்திற்கு ஒரு பகுதி வழங்கப்பட்டுள்ளதாகவும், எஞ்சிய அளவை எதிர்காலத்தில் பாவிப்பதற்காக பிரதம அமைச்சர் அலுவலகத்தில் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பபட்டுள்ளது.	அன்பளிப்பை இலக்கு வைக்கப்பட்ட குழுவிற்காக பகிர்ந்தளிக்க நடவடிககை எடுக்க வேண்டும்.
(ஆ)	அரசின் ஏனைய நிறுவனங்களிற்கு சொந்தமான 06 வாகனங்கள் ஒழுங்காக சுவீகரிக்கப்படாது 02 ஆண்டுகளிற்கும் 09 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமாக பிரதம அமைச்சரின் அலுவலகத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.	ஏனைய அரச நிறுவனங்களிற்கு சொந்தமான 06 வாகனங்கள் பிரதம அமைச்சர் அலுவலக நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டு இருந்ததுடன் அவற்றில இரண்டு ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளதுடன் காணப்படும் நடைமுறையின் பிரகாரம் பராதீனம் செய்ய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய 04 வாகனங்களையும் கடமை தேவைப்பாட்டின் மீது இணைக்கப்பட்டுள்ளதுடன் ஒப்படைக்குமாறு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	நிலவுகின்ற சட்டத்திற்கு இணங்கும் வகையில் வாகனங்களின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. **இணைக்கப்பட்டுள்ள பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர்**

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அலுவகத்தின் அங்கீகார பதவி எண்ணிக்கை 555 ஆனதுடன் அவற்றில் 299 பதவிகள் 2024 திசெம்பர் 31 திகதி வரை வெற்றிடமாக காணப்பட்டன. அது மொத்த பதவியணியினரின் 54 சதவீதமாகும். அங்கீகார பதவிகளில் சிரேஷ்ட மட்டத்தில் 43 சதவீதமும், மூன்றாம் மட்டத்தில் 63 சதவீதமும் இரண்டாம் மட்டத்தில் 52 சதவீதம் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 57 சதவீதமும் வெற்றிடமாக காணப்பட்டது. பதவிகளை மீளாய்வு செய்து வெற்றிடங்ளை நிரப்ப அல்லது பதவிகளை கீழாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.	கடமைப் பணிகளிற்கு பாதகம் இல்லை எனில் பதவியணியினரை திருத்த வேண்டும்.
(ஆ)	கடந்த ஆறு வருட காலப் பகுதியை கவனத்திற் கொள்ளும் போது பிரதம அமைச்சர் அலுவலகத்தில் அங்கீகார பதவியணியை கனிசமாக அதிகரித்துக் கொண்டிருந்ததுடன், 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் 637 ஆன அங்கீகார ஊழியர் எண்ணிக்கையினர் இருந்ததுடன் அது 2018 ஆண்டின் அங்கீகார ஊழியர் எண்ணிக்கையான 354 இற்கு ஒப்பாக 80 சதவீத அதிகரிப்பாகும். முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் 2020 செப்டம்பர் 30, ஒக்டோபர் 09 மற்றும் 16 திகதிய இலக்கம் DMS/1002/1 கொண்ட கடிதங்களின் பிரகாரம, அங்கீகரிக்கப்பட்ட பிரதமர் தனிப்பட்ட பதவியணி 147 ஆகும், ஊடக பிரிவிற்காக திணைக்களத்திற்கு உரித்தான 02 பதவிகளும் 49 தற்காலிக பதவிகளும் மற்றும் பிரதமரின் அலுவலகத்திற்காக 384 நிரந்தர பதவிகளும் 55	பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு அரசியலமைப்பினால் ஒப்படைத்துள்ள நிரந்தர கடமைகள் இல்லாத போதும், பாராளுமன்றம் மாற்றமடைந்ததன் மீது மற்றும் நியமிக்கப்படும் பிரதம அமைச்சர்கள் மாற்றமடையும் போது ஒப்படைக்கப்படும் கடமைகளின் தன்மைக்கு ஏற்ப பிரதம அமைச்சர அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்படும் கடமையின் அளவின் அடிப்படையில் தேவைப்படும் நிரந்தர, தற்காலிக மற்றும் பிரதம அமைச்சரின் தனிப்பட்ட பதவியணி மாற்றமடைகின்றது. காணப்படும் ஏற்பாடுகளிற்கு இணங்கியதாக உச்ச கடமை அளவொன்றை குறைந்தபட்ச பதவியணி ஊடாக மேவுகை செய்து செலவுகளை முகாமை செய்து கொள்ள நடவடிக்கை எடுப்பதுடன், 2024 ஆண்டினுள் கடமை தேவைப்பாட்டின் மீது உள்ளவாறான பதவியணி	பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நோக்கம் மற்றும் பணிகளை அடைந்து கொள்ள போதிய தகைமையுடைய பதவியணியினரை அங்கீகரித்து பேணிக் கொள்ள வேண்டும்.

	தற்காலிக பதவிகளுமாக கூட்டுத் தொகை 637 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டு இருந்தன. 2024 திசெம்பர் 31 திகதியன்று உள்ளவாறாக கடமையில் ஈடுபட்டிருந்தது 256 பதவிகளிற்காக மாத்திரமே ஆகும்.	முகாமை செய்து கொள்ளப்பட்டது.	
(இ)	2018 ஆண்டு முதல் 267 ஆன உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கைக்கு ஒப்பாக 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் முறையே 446 மற்றும் 532 வரை 67 சதவீதம் மற்றும் 99 சதவீத துரித அதிகரிப்பொன்று அறிக்கையிடப்பட்டிருந்தது. கொவிட் தொற்று நிலைமை காரணமாக இந்த காலப் பகுதியில் பெறும்பாலான ஊழியர்கள் வீட்டிலிருந்து பணியாற்றியதுடன், அலுவலக செயற்பாட்டு பணிகளில் மற்றும்செயல் நடவடிக்கைகளில் வளர்ச்சி அல்லது விரிவாக்கமொன்று இடம்பெற்றிருக்கவில்லை.	அதன் போதைய அமைப்பு கட்டமைப்பு மற்றும் காணப்பட்ட கடமைப் பணிகளிற்கு பொருந்தும் வகையில் மறுசீரமைப்புச் செய்யும் சேவை தேவைப்பாட்டை கவனத்திற்கொண்டு அனுப்பப்பட்ட கோரிக்கையின் பிரகாரம், முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் மூலம் பதவியணியை திருத்தி அங்கீகார பதவியணியினரை 561 வரை 2022 ஆண்டினுள் அதிகரத்துள்ளதாகவும் அதற்கு மேலதிகமாக ‘‘பிரதம அமைச்சரின் தனிப்பட்ட பதவியணியை நியமித்தல்’’எனும் தலைப்பில் வழங்கியுள்ள அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2020.08.09 திகதி முதல் முன்னால் மதிப்பிற்குரிய பிரதம அமைச்சரின் சேவைக் காலத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் தனிப்பட்ட பதவியணியிற்கு 48 பதவியணியினர் மற்றும் மேலதிகமாக இன்னும் 34 பதவிகளிற்கு பதவியணியினர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கீகார ஆளணியிளர் 2020 ஆண்டினுள் 147 வரை அதிகரித்து மேற்குறித்த மீளாய்வு மற்றும் அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் பதவியணியினர் இணைப்பு மற்றும் ஆட்சேர்ப்பு 2021 ஆண்டில் செய்ததில் உள்ளவாறான பதயியணியினர் எண்ணிக்கை 532 வரை அதிகரித்துள்ளது.	கடமைப் பணிகளிற்கு பாதகம் இல்லாவாறு பதவியணியினரை திருத்த வேண்டும்.